**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் - 02 - 2020**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்பொதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது (I) கொழும்பு நகரத்தின் தென்பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு, (II) கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைபு, (III) மஹரகம பகுதியில் இருக்கின்ற பொறியியலாளர் அலுவலகத்தின் மேல் இரண்டு மாடிகளை நிர்மாணித்தல், (IV) பாமண்கடையில் அப்பகுதியில் பொறியியலாளர் அலுவலகத்தை நிர்மாணித்தல், (V) மத்திய பயிற்சி நிலையத்தை புதுப்பித்தல், (VI) எலிய கவுஸ் நீர்த் தேக்க வளவில் உத்தேசிக்கப்பட்ட இறைக்கும் இல்லங்களிற்கான சிவில் வேலைகள், (VII) எலிய கவுஸ் நீர்த் தேக்க வளவில் உத்தேசிக்கப்பட்ட இறைக்கும் இல்லங்களிற்கான எந்திரவியல் மற்றும் மின்சார வேலைகள், (VIII) கொழும்பு நகரத்திற்கான ஆலோசனை மற்றும் பங்குபற்றல் நடவடிக்கைகளுடன் சமூகங்களின் இயலளவை கட்டியொழுப்புதல் போன்ற பெயர் கொண்ட 08 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் 59.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் 15.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி நிதியத்தாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொர் 30 மில்லியன் அல்லது 25.4 சதவீதத்தை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்த அதேநேரம் கொழும்பு மாநகர சபை மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளை கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 233.56 மில்லியன் தொகையான நாணயமாற்று வீதம் நிதி நிலமைக் கூற்றில் நிதி மூலங்களின் கீழ் புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக தவறாக நடைபெறும் வேலையிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | 233.56 | கணக்காய்வாளருடைய சிபார்சுகளுடன் நாங்கள் உடன்படுவதுடன் இதன்படி கணக்குகள் சீராக்கப்படும் | நாணய மாற்று இலாபம் நிதிக்கூற்றில் நிதி மூலங்களின் கீழ் புறம்பாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால-மைப்பு சபை மற்றும் கொழும்பு மாநகர சபையால் அமுலாக்கப்பட்ட கடன் இல. 3030 இற்காக கடனளிக்கும் முகவரால் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 79.64 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 513,119 கூட்டுத்தொகையான வட்டி கட்டணங்கள் அமுலாக்கல் முகவர்களிற்கு இடையில் பிரிக்கப்பட்டு ஒதுக்கப் பட்டிருக்காததுடன் 2020 திசெம்பர் 31 வரையான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், கடன் பெறுகைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 79.64 | ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சேர்ந்து கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் பிரிப்பதற்கு முறையாக பொறிமுறையை விருத்தி செய்யப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிலிருந்து கணக்கேடுகளில் கணக்கீடு செய்யப்படும். | கடனளிக்கும் முகவாரல் நேரடியாக அறவிடப்பட்ட உரிய கிரயம் ஆண்டு இறுதியில் பயன்படுத்திய தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 3029 ஆம் இலக்க கடனிற்காக 2015 முதல் 2020 வரையான ஆண்டுகளில் ரூபா 446.86 தொகையான கடப்பாட்டு மற்றும் வட்டிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போதான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பெறுகைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நிதி நிலமைக்கூற்றில் திறைசேரி மானியங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், அதில் 2019 திசெம்பர் 31 வரை சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 307.87 மில்லியன் முன்னைய ஆண்டு சீராக்கமாக சீராக்குவதற்கப் பதிலாக தற்போதைய ஆண்டு கொடுக்கல் வாங்கல்களாக நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்தான காசுப் பாய்ச்சல் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 446.86 | கணக்காய்வாளருடைய சிபார்சுகளுடன் நாங்கள் உடன்படுவதுடன் இதன்படி கணக்குகள் சீராக்கப்படும் | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் பெறுகைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதி நிலமைக் கூற்றில் திறைசேரி மானியத்தை சீராக்க வேண்டும். |
| (ஈ) | 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளில் ரூபா 273.26 கூட்டுத்தொகையான பெறுமதிசேர் வரி முன்னைய ஆண்டு சீராக்கமாக சீராக்குவதற்குப் பதிலாக தற்போதைய ஆண்டு கொடுக்கல் வாங்கல்களாக நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் விளை-வால், மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | 273.26 | கணக்காய்வாளருடைய சிபார்சுகளுடன் நாங்கள் உடன்படுவதுடன் இதன்படி கணக்குகள் சீராக்கப்படும் | திரண்ட முன்னைய ஆண்டு மீதிகள் முன்னைய ஆண்டு சீராக்கமாக சீராக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | | |
| (உ) | செயற்திட்டத்தின் சார்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட்ட ரூபா 124.68 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 124.68 | செயற்திட்ட கணக்குகளை இறுதியாக்கிய பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் இந்த பதிவு நாளதுவரையாக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட புத்தகங்களில் இப்பதிவு பின்னர் கண்ணீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் சம்பந்தமான சகல செயற்திட்ட செலவினங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2. விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------

| விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடைர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்ட பணிப்பாளரை செயற்திட்ட முகாமைத்துவ திறனை உறுதிப்படுத்தும் நோக்கில் எப்போதும் முழுநேர அடிப்படையில் சேர்க்க வேண்டும். | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று ஆக அமுலாக்கப்படுகின்ற போதிலும் 2021 பெப்ரவரி 2 இலிருந்து நுகர்வோர் மற்றும் சொத்து முகாமைத்துவ பிரிவின் கடமைகளை மேவுவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் மேலதிக பொது முகாமையாளராக பதவியுயர்த்தப்பட்டிருந்தார். ஆகவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்ட நடவடிக்கைகளை நிறை வேற்றுவதற்கு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளரை பெறுவதற்கு | புதிய பதவியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் இன்னமும் உறுதிப்படுத்தபடததுடன் இது பதில் கடமை பதவியாக மாத்திரமே உள்ளது. அத்துடன் செயற்திட்டம் 01 உம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முகாமைத்துவம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உறுதிப்படுத்தலை அடிப்படையாக கொண்டு செயற்திட்ட பணிப்பாளர் பதவியை மாற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்படும். | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளரை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

| விடய இல. | நடவடிக்கைகள் | அலகு | எதிர்பார்க் கப்பட்ட இலக்கு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்ட இலக்கு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் தெற்கு பிரந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு (ICB 04) | | | | செயற்திட்ட காலப் பகுதி நீடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. | | வேலைகளை நிறைவேற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்க வெண்டியதுடன் ஒப்பந்தகாரரின் முன்னேற்றங்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| | - குழாய்கள் குழாயிடல் பிரதான பீடர் உள்ளடங்கலாக) | மீற்றர் | 209,576.44 | 119,078.95 | | | |
| | - சேவை மாற்றங்கள் | வீட்டு உரிமை | 32,956 | 3,455 | | | |
| | - DMA முன்னேற்றம் (முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பிராந்திய நிலையங்களிற்கு கையளிக்கப்பட்டவை) | எண் | 23 | - | | | |
| | - ஒட்டுமொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம் | 55.77 | 51.38 | | | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பு (ICB 03) | | | | செயற்திட்ட காலப் பகுதி நீடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. | கோவிட் நோய் தொற்று மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் பூர்த்தியாக்கல் திகதி பின்தள்ளப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் வரை | |
| | - குழாய்கள் குழாயிடல் பிரதான பீடர் உள்ளடங்கலாக) | மீற்றர் | 109,146 | 93,639 | | | |
| | - சேவை மாற்றங்கள் | வீட்டு | 8,528 | 3,453 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | - DMA முன்னேற்றம் (முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பிராந்திய நிலையங்களிற்கு கையளிக்கப்டப்டவை) | உரிமை எண்ணி | 18 | 02 | | கால நீடிப்பு சிபார்சு செய்யப்பட்டது. தயவுடன் இணைப்பு 1 ஐ பார்க்கவும்) | |
| | - ஒட்டுமொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம் | 75.6 | 72.4 | | | |
| (இ) | பாமண்கடை அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணம் | நிர்மாணத்திற்கான காணி கிடைக்காமையால் நிர்மாண வேலைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மில்கோ கம்பனியிடமிருந்து புதிய காணி சுவீகரிப்பு நடைமுறைகள் செயற்பாட்டில் உள்ளன. | | | அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்தில் தாமதம். | புதிய காணியின் அமைவிடம் மாற்றம் காரணமாக வடிவமைப்பு வேலைகளும் புதிய காணி அமைவிடத்திற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியுள்ளது. | காணி சுவீகரிப்பு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கும் தாமதமில்லாமல் நிர்மாண வேலைகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உத்தேசிக்கப்படட பயிற்சி நிலையம், விடுதி கட்டிடம் மற்றும் சிற்றூண்டிச்சாலை நிர்மாணம் | சதவீம் | 80 | 64.6 | நிர்மாண வேலைகளின் தாமதம் மற்றும் செயற்திட்ட காலப் பகுதி நீடிக்கும் சாத்தியம். | 2020 திசெம்பர் வரையும் தொற்று நோய் பரவிய (கோவிட்-19) போதும் உத்தேசிக்கப்படட பயிற்சி நிலையம், விடுதி கட்டிடம் மற்றும் சிற்றூண்டிச்சாலை நிர்மாணம் வேலைகளில் ஈடுபடுத்திய மேற்பார்வை உதியோகத்தரை தவிர சராசரி நாளாந்த 120 ஊழியர்கள் இருந்தனர். ஆனால், 2021 சனவரியிலிருந்து வேலைத்தளத்தில் அன்ரீஜன்/ பீசீஆர் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்திய பின்னர் சில ஊழியர்கள் | நீடிக்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தைப் பூர்த்தியாக்குவதற்கு அறிவுறுத்தல் வழங்க வெண்டியதுடன் ஒப்பந்தகாரரின் முன்னேற்றங்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

கோவிட்- 19 நோய் தொற்று அறிகுறி உள்ள காரணத்தால் வேலைத்தள ஊழியர் புறநகரில் இருந்த போதிலும் ஊழியர்களை அழைப்பது கடினமான பொறுப்பாக இருந்தது. அவர்கள் இன்னமும் வேலைத்தளததின் ஒரு பகுதியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நோய் தொற்று இல்லாமையை உறுதிப்படுத்தினர். அத்தகைய நிலைமை வேலைத்தளத்தில் நோய் தொற்றேற்படும் நிலையை விளைவிதிருந்ததுடன் தொழிலாளர் முழு மனதுடன் வேலைக்கு வருகைதர தயங்கினர்.

வேலைத் தளத்திற்குள் போக்குவரத்து வரையறை (பிரயாணம்) மற்றும் ஆட்சேர்த்தல் மற்றும் வெளியிட தொழிலாளரின் வதிவிடம் என்பன வினைத்திறன் இழப்புக்களை விளைவித்திருந்த கோவிட - 19 பாதுகாப்பு சுகாதார பரிந்துரைகளை

| | | |
|---|---|---|
| | | பின்பற்றி அனுமதிக்கக் கூடிய அளவிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது.<br><br>மேற்குறிப்பிட்ட பிரதான காரணங்கள் செயற்திட்ட முன்னேற்றம் மற்றும் முன்னரே நிர்மாண கட்டங்களை பேணப்பட்டமையால் அதன் உத்வேகம் குறைப்பதற்கு செயற்திட்ட அடைவை பாதகமாக பாதித்திருந்தது.<br><br>ஆகவே, மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்திற்கொள்கையில் திருப்திகரமாக செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்த கால நீடிப்பு வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் தெற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பறிகான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் (ICB 04) 2021 யூன் 04 இல் | மேற்குறிப்பட்ட 4.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட காரணங்களைத் தவிர ஏதாவது திகதி வழங்கப்படுகையில் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்காத அல்லது குறைவாக | வேலைகளை நிறை வேற்றுவதற்கும் ஒப்பந்தகாரரரை நெருக்கமாக கண்காணிக்கவும் அறிவுறுத்தல் வழங்க வேண்டும். |

பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. 56.81 சதவீதத்திற்கு சமமான 209,576.44 மீற்றர் குழாயிடல் வேலைகளில், 119,078.95 மீற்றர குழாயிடல் மற்றும் கொழும்பு தெற்குப் பகுதியில் 23 மாவட்ட மீற்றரிடலின் 32,956 சேவை மாற்றங்களில், 3455 சேவை மாற்றங்கள் (கட்டம் 2) மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அதில் இரண்மு மீற்றிரிடல் மாவட்டங்களில் 24,280.50 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 3,122 சேவை மாற்றங்கள் உள்ளடங்கலாக வேலைகள் 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 23 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் எதுவுமே பூர்த்தியாக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் ஒப்பந்தகாரரின் நலிவான மேற்பார்வை மற்றும் கணக்காணிப்பு, ஒப்பந்தகாரரால் நாளந்த நடவடிக்கைகளின் குறைவான எண்ணிக்கை மற்றும் வேைலத்தளங்களில் ஈடுபடுத்தப்பட்ட குறைவான தொழிலாளர் படையணி, செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டிருக்காத வேலைகள் மற்றும் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் போன்றன காரணமாக 42 மாத ஒப்பந்த காலப்பகுதி கடந்த பின்னர் 51.38 சதவீத மெதுவான முன்னேற்த்தைக் காட்டியது. எனவே, பட்டியலிடப்பட்ட ஒப்பந்தகாலப் பகுதிக்குள் பூர்த்தியாக்க வேண்டியிருந்த மிகுதி 90,497.49 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 29,461 சேவைப் பரிமாற்றங்கள் என்பன ஐயத்திற்கிடமாகவுள்ளது.

ஈடுபடுத்தப்பட்டிருக்காரமக்கு சாத்தியமுள்ளது. ஒப்பந்தகாரர் நிலவிய கோவிட் - 19 நோய் தொற்று நிலைமை காரணமாக கடந்த ஆண்டிலிருந்து தொழிலாளர் பிரச்சனைகளை எதிர் நோக்கியிருந்தார். அதிகளவான தொழிற்றிறனுள்ள மற்றும் தொழிற்றிறனற்ற தொழிலாளர் படையணியை வெளியிடங்களிலிருந்து வேலைத் தளங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றனர். அவர்கள் அவர்கள் கொழும்பிற்கு வருவதற்கு தயங்குகின்றனர். இருந்த போதிலும், ஒப்பந்தகாரர் இன்னமும் தெடருகின்றனர். இது சகல வரையறைகள் மற்றும் கஸ்ரங்களும் நிலவிய நாளாகும். முன்னரே குறிப்பிடப்பட்டவாறு வேலையின் முனனேற்றம் மேற்குறிப்பிட்ட காரணங்கள் மற்றும் எதிர்பராத நிலைகள் காரணமாக திட்டமிடப்பட்ட வேலைப் பட்டியலில் இருந்து விலகியிருந்தது. கஸ்ரமான நிலைகள் காரணமாக, ஒப்பந்தம் தற்போதைய நிலையின் கீழ் படிப்படியாக முன்னெற்றத்தை அடைவதற்கு இயலக்கூடியதாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொழும்பு நகரத்தின் மேற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் (ICB 03) 2021 பெப்ரவரி 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் 109,146 மீற்றர்களில் 93,639 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 8,528 சேவை மாற்றங்களில் 3,453 சேவைப் பரிமாற்றங்கள் மாத்திரமே (கட்டம் 2) பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 18 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் 2 மாவட்டங்கள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 06 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பை மதிப்பாய்வுக் கட்டம் 2020 திசெம்பர் 31 வரை செயற்பாட்டில் உள்ளது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 77.2 சதவீதமாக இருந்த போதிலும் மீகுதி 15,507 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 10 மாவட்ட மீற்றரிடல் பகுதி குழாயிடல் வேலைகள் என்பன ஒப்பந்த்தின் பட்டயலிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்குவது ஐயத்திற்கிடமாக உள்ளது. | கோவிட் தொற்று நோய் மற்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் என்பன காரணமாக பூர்த்தியாக்கல் திகதி இலக்கு மாற்றப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் வரை காலநீடிப்பு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. (தயவுடன் இணைப்பு 1 ஐ பார்க்கவும்) | நீடிக்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கும் ஒப்பந்தகாரர் முன்னேற்றத்தை நெருக்கமாக கண்காணிக்கவும் அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். |
| (இ) | கொழும்பு நகரத்தின் மேற்கு பகுதி (ICB -03) மற்றும் கொழும்பு நகரத்தின் தெற்கு பகுதி (ICB--04) வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு ஆவணத்தின பிரகாரம், குழாயிடல்களிற்காக திறந்த கேள்வி முறைக்கு பதிலாக குழாய் பிரித்தல் மற்றும் இணைத்தல் முறை (அகழி | கேள்வி ஆவணம் தயாரித்தல் கட்டத்தின் போது, பரிந்துரைக்கப்பட்ட குழாய் புனரமைப்பு வேலைகள் “2012 நாளதுவரையான கற்கை பிரதான திட்டத்திறகு” அமைய வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் வகுதிப்படுத்தப் பட்டதுடன் மேற்குறித்த கற்கையிலிருந்து வங்கப்பட்ட நீரியல் மாதிரி அடிப்படை GIS இலிருந்து அளவைகள் | ஒப்பந்தம் வழங்க முன்னர் செயற்திட்டத்தின் நோக்கெல்லையை சரியாக நிர்ணயிக்க வேண்டும். |

முறை) அமுலாக்கப்பட வேண்டுமென ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதுடன் ஒவ்வொரு ஒப்பந்த பெறுமதியின் 30 சதவீதத்திற்கு சமமான ரூபா 3,513.45 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர், செயற்திட்டமானது முறையான தரவு இன்மை, குழாய்வழிகளிற்கு இடையில் முறையற்ற இணைப்பு அடிப்படை, மட்டமிடல் டம், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மற்றும் கற்றடைப்பு வால்பு முறைமை விபரங்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாடுகள் போன்ற காரணங்களால் அகழி முறையை திறப்பதற்கு அகழியற்ற முறையின் கீழ் புனரமைப்பு வேலைகளை தவிர்ப்பதற்கு மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதேபோல தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நிர்மாணத்தின் போது மாற்றீட்டு குழாய் வழிகள் ஊடாக 24 மணித்தியால காலப்பகுதிற்கு மேலாக நாளொன்றிற்கான ஆகக்கூடிய கேள்வி 50 சதவீத வழங்கல் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கேள்வி கோரல் ஆவணங்கள் தயாரித்தல் அல்லது சத்தியவள அறிக்கை கட்டம் என்பவற்றிற்கு மன்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் கருத்திற் கொள்ளப்பட்டிருக்காத மேற்குறிப்பிட்ட காரணங்கள் கணக்காய்விற்கு ஐயத்திற்கிடமாகவுள்ளது. இதன்விளைவால், போட்டிக் கேள்வி கோரல் வரையறுக்கப்பட்டதுடன் இந்த ஒப்பந்தம் கேள்வியடலிற்கு அதிகளவான ஒப்பந்தகாரர் பிரித்தல் மற்றும் இணைத்தல் முறையின் புதிய தொழில்நுட்பம் இல்லாமையால் போட்டி கேள்வி கோரல் ஊடாக முற்போக்கு சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட நோக்கெல்லை மாற்றங்களிற்காக கொள்வனவு பிரித்தெடுக்கப்படுகின்றன. இந்த நாளதுவரையான கற்கை பிரதான திட்ட காலத்தின் போது செய்யப்பட்ட பௌதீக ரீதியான புலனாய்வு வேலைகள் மிகவும் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் கட்டிட படம் வரைதல், வேலைத்தள பரிசோதனைகள், O&M பிரிவிடமிருந்தான விபரங்கள் போன்றவற்றிலிருந்து அதிகமான தரவு சேகரிக்கப்பட்டது. ஆகவே, கேள்வி ஆவணம் தயாரித்தல் கட்டத்தின் போது, பிரதான கற்கை திட்டத்திலிருந்து பிரேரிக்கப்பட்ட பிரித்தல் வேலைகளை நிறைவேற்றுவதற்கு விபரங்கள் போதாதிருந்ததுடன் பிரித்தல் வேலை நோக்கெல்லை கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்படவில்லை.

முதலாவது ஒப்பந்தம் பொதி 1 தொடங்கிய பின்னர் புலனாய்வு வெலைகள் வடிவமைப்பு வெலைகளுடன் சேரத்து செய்யப்பட்டதுடன் இருக்கின்ற குழாய்களின் உண்மை நிலை, அடித்துச் செல்லப்பட்டதை இனங்காணலில் கடினம்/ பரிந்துரைக்கப்பட்ட காற்றலை வால்புகள், குழாய்கள் பிரித்தல், இருக்கின்ற சட்ட விரோத இணைப்புக்களை இனங்காணல் போன்றன இனங்காணப்பட்டதுடன் இதன்படி, வடிவமைப்பு வேலைகள் விநியோக முறையிலிருந்து பிர்த்தல் வேலைகள் தவிர்த்து மேற்கொள்ளப்பட்டன. மேலும், 18 அங்குல CI பரிமாற்ற வழிகளிற்காக ஒப்பந்தகாரர் பொதி 2 இன் ஊடாக CCTV புலனாய்வுகள் வேலைகளைச் செய்திருந்ததுடன் அந்த சகல வழிகளும் எந்தவொரு புனரமைப்பு வேலைகளும் செய்யப்படாமல் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு மிகவும் நல்ல நிலையில் இருந்தது எனவும் இனங்காணப்பட்டதுடன் இதன்படி வடிவமைப்பு வேலைகள் எந்தவொரு புனரமைப்பு வேலைகளும்

| | | |
|---|---|---|
| வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் குறைநிரப்பு என்பவற்றிகமைய ஆசிய அபிவிருத்தி வங்கியிமிருந்தும் அனுமதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றாமல் நீண்ட காலம் பயன்படுத்துவதற்கு CI குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்துவதற்கு சகல நான்கு பொதிகளும் பிரித்தல் வேலைகளை தவிர்த்தல் மூலம் செய்யப்பட்டிருந்தது. | |

**3.3 வேலைத்தள வருகைகளில் செய்யப்பட்ட அவதானிப்புகள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | W1097/BT/02 ஆம் இலக்க வரைபடத்தின் “A” வகை உலர்த்தலின் பிரகாரம், கற்பாறையின் குழாயிடல் குழாயின் மேல் மட்டத்தலிருந்து 150 மிமீ (6 அங்குலம்) தடிப்பம் வரை இடப்பட வேண்டியதுடன் குழாய் வழியின் மேல் மட்டத்திலிருந்து 300 மிமீ இற்குள் தயாரிப்பு அடையாளம் இடப்பட வேண்டும். ஒப்பந்த பொதி 04 இன் DMA 33C இலுள்ள றொபேட் கிறீவ் அவனீவில் குழளாயிடல் வேலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம், கற்பாறையின் குழாயிடலின் தடிப்பம் 150 மிமீ (6 அங்குலம்) இற்கு பதிலாக 100 மிமீ (4 அங்குலம்) ஆக இருந்ததுடன் தயாரிப்பு அடையாளம் குழாய் வழியின் மேல் மட்டத்திலிருந்து 300 மிமீ இற்கு பதிலாக 225 மிமீ இற்குள் இடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதற்கு மேல், தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிகள் அல்லது சகல முழு அழகப்பட்ட கழிவுகள் பொருட்கள் மீள்பயன்பாட்டு நோக்காக குறிப்பிடப்பட்டு | வேலைத்தளம் சிங்கள புதுவருடத்திற்காக ஒப்பந்தகாரரால் மூடுவதற்காக மிகவும் நெருங்கிய நாளான 2021 ஏப்ரல் 08 இல் மூடப்பட்டது. வீதியை பொருத்துவதற்காக கற்பறை துகழ்கள் அல்லது தோண்டப்பட்ட மண்ணுடன் பிரித்தல் மற்றும் கட்டாயமான மீள் நிரப்புதல் அகழப்பட்ட மண் மீள நிரப்பும் நோக்கத்திற்கு பொருத்தமற்றதாக இருந்தது. ஆகவே, உரிய DMA பொறியியலாளர் படுக்கைக்காக கிடைத்த துகழ்களுடன் வேலைகளை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் குழாயின் மேற் பரப்பிற்கான தொகை குறைக்கப்பட்டதுடன் முன்னேற்றத்தை இடையூறு இல்லாமல் தற்காலிகமாக ஒட்டுதலை மீள நிரப்புதல் மற்றும் வேண்டப்பட்ட நியமங்களின் பிரகாரம் புது வருடத்தின் பின்னர் மீள நிரப்பப்படும்.<br><br>செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் தொடர் நடவடிக்கை எடுப்பதுடன் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றதுடன் பின்னர் நாளாந்த வேலைத்தள அறிக்கையை அனுமதிப்பார். | குழாய்கள் குழாயிடல் வேலைகள் உரிய வரைபடம் மற்றும் வேலைத்தள வேலைகளின் நெருக்கமாக மேற்பார்வை நியமங்கள் என்பவற்றின் பிரகாரம் செய்யப்பட வேண்டும். |

முறையே 15 மிமீ மற்றும் 25 மிமீ பெரிய கற்களிலிருந்து இலவசமாக பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் மீளநிரப்புதலிற்காக அகழப்பட்ட மண்ணுடன் (பிரிக்கப்படாமல்) 25 மிமீ ஐ விட பெரிய கற்கள், கொங்றீட் மற்றும் செங்கல் துண்டுகள் என்பவற்றினை பயன்படுத்தியிருந்தார் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) W1097/BT/02 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம், வீதி மேற்பரப்பின் தற்காலிக வீதி சீர்படுத்தல் கூட்டு மொத்த அடிப்படை தொடர் அடுக்கு (ABC அடுக்கு) 275 மிமீ தடிப்பத்துடன் 98 சதவீதம் கச்சிதமாக செய்யப்பட வேண்டியதுடன் மேற்பரப்பு ABC அடுக்கு பாதை கோடாக CSS தார் பிரயோகிக்கப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 27 இல் ஒப்பந்த பொதி 04 இன் பெல்டோனா, அதமலியா மற்றும் பூகன்னான் போன்ற பெயருடைய தற்காலிக வீதி சீர்படுத்தல் தொடர்பில் நடாத்தப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம் தற்காலிக வீதி சீர்படுத்தல் வேலைகள் ABC அடுக்கு கோட் முறைப்படி இடப்பட்டிருக்காததுடன் தூசுகள் அகற்றப்படாமல் CSS தாருடன் வீதிக் கோட் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ABC அடுக்கு கோட் வெடித்திருந்தது. எனவே, திரும்ப நிரப்புதல் மற்றும் தற்காலிக வீதி சீர்படுத்தல் வேலைகள் என்பன உப ஒப்பந்தகாரர்கள் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இன்மையால் வரைபடத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2021 ஏப்ரல் 27 காலையில் வேலைத்தள பரீட்சீப்பு செய்யப்பட்டதுடன் அந்த சகல வேலைத்தளங்களிலும் 2021 ஏப்ரல் 25 அல்லது 26 இல் செய்யப்பட்டிருந்தது. அந்த இரண்டு நாட்களும் காலை 7.00 பிப மணி முதல் இரவு 10.00 பிப மணிவரை பாரிய மழை பெய்திருந்தது. அந்த சகல வேலைத்தளங்களும் பொதுவாக பகலில் தொடங்கி இரவு 10.00 மணியளவில் மூடப்படுகின்றது. ஆகவே, அந்த சகல வேலைத்தளினது தற்காலிக வீதி சீர்படுத்தல் வேலைகள் ABC கோட்டில் பெருமளவு தண்ணீர் காரணமாக முறைப்படி பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் வேலைத்தளத்தை போதியளவு உலர்த்திய பின்னர் தற்காலிக வீதி சீர்படுத்தலை செய்வதற்கு அறிவித்திருந்தனர். இதன்படி அந்த சகல வேலைத்தளங்களும் வேண்டப்பட்ட நியமங்களிற்கு அமைய இணங்குவதற்கு 2- 3 நாட்களின் பின்னர் பூர்த்தியாக்கப்படுகின்றதுடன் சீர்படுத்தல் வேலைகள் பின்னர் சான்றுபடுத்தப்படுகின்றன.

குழாய்கள் குழாயிடல் வேலைகள் உரிய வரைபடம் மற்றும் வேலைத்தள வேலைகளின் நெருக்கமாக மேற்பார்வை நியமங்கள் என்பவற்றின் பிரகாரம் செய்யப்பட வேண்டும்.

(இ) IBC 03 ஒப்பந்தத்தின் 12B மற்றும் 21 ஆம் இலக்கங்களில் மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் குழாயிடல் வேலைகள் மீது நடாத்தப்பட்ட பௌதீக பரிசோதனை பிரகாரம், 7 வீதிகள் தொடர்பில் 1992.23 மீற்றர் தற்காலிக வீதி சீர்படுத்தல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் நிரந்த வீதி சீர்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படாமல் 06 முதல் 12 மாதங்கள் வரையான காலத்திற்கு மேலாக பேணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அதில் 2020 திசெம்பர் 31 வரையும் 1,830.5 மீற்றர் அமுக்கப்பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, வீதி மேற்பரப்பு பாதகமாக பாதிக்கும்.

கவனத்திற்கொள்ளபட்டது, எவ்வாறாயினும் நாங்கள் பொது மக்களிற்கான இடையூறுகளை குறைக்கும் நோக்கில் தற்காலிக சீர்படுத்தல் திருப்திகரமான மட்டத்தில் பேணுவதற்கு முயற்சிக்கின்றோம்.

தாமதமில்லாமல் நிரந்தர வீதிச் சீர்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

**கணக்காய்வு விடயம்**

2020 திசெம்பர் 31 வரை கொழும்பு நகரத்தின் மேற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு மற்றும் முறைமை புனரமைப்பின் (ICB 03) கீழ் கொழும்பு மா நகர சபைக்கு (CMC) வீதி அனுமதி தொடர்பில் ரூபா 60.53 மில்லியன் தொகையான மீளளக்க வேண்டிய பாதுகாப்பு வைப்பு செலுத்தப்பட்டிருந்தது. அதில், ரூபா 3.78 மில்லியன் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் அவை திறைசேரிக்கு மாற்றுவதற்கு பதிலாக தேசிய நீர் வழங்கல்

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

செயற்திட்டமானது கடன் நிதிகள் மற்றும் இலங்கை அரசாங்க நிதிகளைத் தவிர எந்தவொரு பெறப்பட்ட நிதிகளை வைத்திருக்கவோ அல்லது பயன்படுத்தவோ முடியவில்லை. அந்த நிதிகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. செயற்திட்டமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முகாமைத்துவத்திற்கு கணக்காய்வாளருடைய கொள்கைகளை தொடர்புபடுத்த வேண்டியதுடன் கணக்காய்வாளரை நாளதுவரையாக்க வேண்டும்.

**கணக்காய்வளருடைய சிபார்சுகள்**

மீளளிக்க வேண்டிய வைப்புகள் கடன் பெறுகைகள் ஊடாக செய்ய வேண்டியதில்லை. செயற்திட்டத்தின் இறுதியில் அத்தகைய வைப்புகள் இருக்குமாயின் பயன்படுத்தாத கடன் தொகை மீதியாக திறைசேரிக்கு மாற்றப்பட வேண்டும்.

மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனவே, மீளளிக்க வெண்டிய வைப்புத் தொகைக்கு சமமாக இருந்த கடன் பெறுகைகள் கடன் பெறுகைகளாக பயன்படுத்தப்பட்டவையாக சேமிக்க வெண்டியதுடன் செயற்திட்ட காலப் பகுதி இறுதியில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கணக்குப் புத்தகங்களிற்கு கொண்டுவரப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 விதிவிலக்கான நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| இடைக்கால கொடுப்பனவு சான்றிதழிற்கான (IPC) கொடுப்பனவுகளின் தாமதம் தொடர்பில் 2020 திசெம்பர் 31 வரை 03 ஒப்பந்தங்கள் தொடர்பில் தாமத கட்டணங்களாக ரூபா 24.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2017 மார்ச் மாதத்தில் முற்பணக் கொடுப்பனவு உள்ளடங்கலாக கொடுப்பனவுகளை விடுவிக்கும் நேரத்தில் அரசாங்க திறைசேரியில் நிதிகள் இன்மையால் செலுத்தப்பட்டிருந்தது. | தாமதமில்லாமல் கொடுப்பனவுகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |

## 3.6 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பொது ரூபா 2,272.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒதுக்கத்தின் 70 சதவீதத்திற்கு சமமான ரூபா | ஒப்பந்த பொதி 3, ஒப்பந்தகாரரின் பிரதான திட்டத்தின் பிரகாரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் கோவிட் நோய் தொற்று காரணமாக, நாங்கள் இலக்கினை | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு கூடிய முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,602.41 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அடைவதற்கு இயலாதுள்ளோம். ஆகவே, நிதியும் பயன்படுத்தப்பட முடியவில்லை.<br><br>ஒப்பந்த பொதி 4 இ.ருபா 1,150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டிற்காக இ.ரூபா 783 மில்லியன் உள்ளபடியான செலவாக இருந்தது. இது பிரதானமாக நாட்டில் நிலவிய தொற்று நோய் காரணமாக விளைந்திருந்ததுடன் இது பட்டியலிடப்பட்டவாறு பொருட்கள் கொள்வனவிற்கு இயலாதிருந்தது. | |
| (ஆ) | உள்ளூர் கூறின் கீழ் ரூபா 577.67 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் மற்றும் வெளிநாட்டு கூறின் கீழ் ஐ.அ.டொலர் 4.15 மில்லியன் என்பன 2017 பெப்ரவரி 22 இல் ICB 04 ஒப்பந்தத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரின் நலிவான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தால் 48 மாத செயற்திட்ட காலப்பகுதியில் 42 மாதங்கள் கடந்த பின்னர் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் இந்த நிலை அவதானித்திருந்ததுடன் ஒப்பந்தகாரரின் கொள்கைக்குள் புதிய அறவீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி, தயாரிக்கப்பட்டிருந்த முற்பணக் கொடுப்பனவின் அறவீட்டு புதிய கடன் தீர்ப்பு வீதம் ஒப்பந்த நிபந்தனைகளுடன் திருப்தியடைவதற்கு செய்யப்பட வேண்டும். | புதிய அறவீட்டு திட்டத்தை அமுலாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (இ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 ஆக இருந்தது, பின்னர் செயற்திட்ட காலப்பகுதி ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் மற்றும் செயற்திட்டத்தின கண்காணிப்பு வேலைகளின் வினைத்திறனின்மை போன்றன காரணத்தால் 2022 ஒக்தோபர் 22 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா | **கடினமானவைகள்:**<br>1. சரியான வரை படம் மற்றும் GIS தரவு என்பன இன்மையால் எதிர்பாராத குறை பயன்பாடுகள்.<br>2. CMC, RDA, SL பொலீஸ், SLLRDC, SLPA, SL பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்ற ஏனைய முகவர்களிடமிருந்து அனுமதியில் தாமதம்.<br>3. CMC முன்னுரிமைக்கான தாமதம், எங்களுடைய நிகழ்ச்சித்திட்டத்தின் | நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கும் ஒப்பந்தகாரரின் முன்னேற்றத்தை நெருக்கமாக கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

79.95 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,413.25 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 44.38 மில்லியன் மாத்திரம் 2020 திசெம்பர் 31 உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே, கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு தாமதப்படுவதுடன் கடன் உடன்படிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேல் கடப்பாட்டுக் கட்டணங்கள் அதிகரிக்கும்.

பிரகாரம், செயற்படுத்த முடியவில்லை.

4. ஏனைய பயன்பாடுகளின் திசை திருப்பல் மற்றும் வேலைகளிற்கான அனுமதி பெறல்.
5. கோவிட் தொற்று நோய் காரணமாக நாங்கள் எதரிபார்த்த இலக்கை அடைய இயலாதிருந்தது.

## 3.7 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் மேற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு மற்றும் முறைமை புனரமைப்பின் (ICB 03) இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் இல 21 இன் பிரகாரம் 2020 செப்தெம்பர் 30 அளவில் முரண் குழுக்களின் அனுமதி அடிப்படையின கீழ் ரூபா 97.87 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதில், 2021 மார்ச் 22 வரையும் முரண் குழுக்களிடமிருந்து ரூபா 86.23 மில்லியன் முரண் கட்டளைகளிற்கான அனுமதிகள் பெறப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | விரிவான வடிவமைப்பின் பிரகாரம், நாங்கள் மாற்றீடாக BOQ ஐ திருத்தியிருந்தோம். இதன்படி நாங்கள் செயற்திட்டத்தின் நிதிகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை கண்காணிக்கின்றோம்.<br>சில விடயங்களிற்கான வீதம் ஒப்பந்தகாரருடன் பேரம் பேசலிற்கு உள்ளாக்கப்பட்டன. ஆகவே நாங்கள் தண்டப்பணத்தை சான்றுபடுத்தாத முரண் விடயங்களை தவிப்பதற்கு IPC ஊடாக மேற்குறிப்பிட்டவற்றிற்கான பகுதியை சிபார்சு செய்திருந்தோம்.<br>சில விடயங்கள் குறித்த DMA பட்டியலில் உள்ள போதிலும் சில விடயங்கள் வேறு DMA விலை பட்டியலில் இல்லாதிருந்தன. அகவே, இது முரணாக கருதப்பட்டது. | முரண் கட்டளை குழுக்களிடமிருந்து அனுமதி பெறுவதற்கும் கொடுப்பனவகளிற்கு மன்னர் குளுக்களின் அனுமதி பெறுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 14 முரண்கட்டளைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 64.06 மில்லியன் தொகை IBC 03 ஒப்பந்தம் தொடர்பில் ரூபா 64.06 மில்லியன் தொகை முரண் கட்டளைக் குழுவால் அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதிய IPC 21 இற்காக முரண் கட்டளைக் குழுவின் அனுமதியில்லாமல் ரூபா 80.15 மில்லியன் தொகை தேமலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2021 மார்ச் 22 அளவில் இது ரூபா 83.01 மில்லயன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | GCC உட்பிரிவு 12.3 இன் பிரகாரம், உப உட்பிரிவு (ஏ) திருப்தியற்றிருப்பின் முரண் வீதங்களிற்கான அளவுகள் அதிகரிப்பு காரணமாக இருக்க முடியாது. இதன்படி, BOQ/அனுமதிக்கப்பட்ட முரண் வீதத்தின் பிரகாரம் அளவு அதிகரிப்பு சான்றுபடுத்தப்பட்டது. | முரண் கட்டளைக் குழுக்களிடமிருந்து அனுமதிகள் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) IBC 03 ஒப்பந்தத்தின் கீழ் 15 வீதிகளின் குழாயிடல் வேலைகள் பூர்தியாக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 அளவில் 01 முதல் 18 மாத கால வீச்செல்லைக்கு மேலாக CMC இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 மார்ச் 31 வரையும் CMC இடமிருந்து மீளளிப்பு ைப்புக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளளிப்பை தீர்ப்பனவு செய்யும் போது CMC இல் கருத்திற்கொள்வேண்டிய தாமதம் உள்ளது மீளளிப்பு செய்ற்பாட்டை நிறைவெற்றுவதற்கு CMC உடன் தெடர்ந்து இணைப்பு நிகழ்ந்துள்ளது. | வைப்புக்களை மீளளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) IBC 04 ஒப்பந்தத்தின் கீழ் 32 வீதிகளின் குழாயிடல் வேலைகள் பூர்தியாக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 30 அளவில் CMC இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 31 வரையும் வைப்புக்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இதற்காக உரிய செயற்திட்ட முகாமையாளர் கவனம் செலுத்துகின்றார். | மீளளிப்பு செயற்பாட்டை நிறைவெற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் | பதிலளிக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட அலுவலகம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.